1969 மார்ச் 1]

மாறி அங்கே உட்காருவதனால், அதைப்பற்றி சபைக்குத் தெரிவிப்பது பொருத்தமாக இருக்கும். அப்படிச் செய்திருந்தால் இந்தப் பிரச்னை வந்திருக்காது. வேறு இடத்தில் இருந்தார் என்பது பற்றி பிரச்னை இல்லை. கட்சித் தலைவர்கள் உட்காருகிற இடத்தில் வேறு ஒருவர் வந்திருக்கிறார் என்றால்..........

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது நண்பர் திரு. ராமமூர்த்தி அவர்கள் எழுப்பிய பாயிண்டு ஆப் ஆர்டர் நியாயமான பாயிண்டு ஆப் ஆர்டர்தான். ஹாஜி ம. மு. பீர் முகம்மது அவர்கள் முஸ்லிம் லீக் கட்சித் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டிருப்பதாக அவருடைய தலைவர் நமக்கு அறிவித்த காரணத்தினால், அவர்களுடைய இடம் மாற்றிக் கொடுக்கப்பட்டிருக்கிறது. இந்த இடம் மாறுதல் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அறிவிக்கப்பட்டிருக்க வேண்டும். அம்மாதிரி அறிக்கை அனுப்புவதிலே கொஞ்சம் கால தாமதம் ஆகிவிட்டது என்பதைத் தெரிவித்துக்கொண்டு இதில் எந்த விதமான முறை கேடும் இல்லை என்பதையும் கூறிக் கொள்கிறேன்.

திரு. ஏ. ஆர். பெருமாள் : கனம் உறுப்பினர் திரு பீர் முகம்மது இடம் மாறி உட்கார்ந்து இருப்பதால், நம்முடைய உறுப்பினர் திரு ராமமூர்த்தி ஒரு ஒழுங்குப் பிரச்சினையை எழுப்பினார்கள். சபாநாயகர் அவர்கள் திரு. பீர் முகம்மது அவர்களுடைய கேள்வியை அனுமதித்த பிறகு, இப்படிப்பட்ட ஒழுங்குப் பிரச்சினையை எழுப்புவது நியாயமா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : எண்ணூரில் நல்லவிதமான வேலைகள் செய்யப் பட்டிருக்கிறன. இன்னும் சில வேலைகள் பாக்கி இருக்கின்றன. அவற்றையும் துரிதமாகச் செய்து கொடுக்க, நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. எல்லாச் சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் வெள்ளிக்குறி (*) இடப்பட்டிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பட்டது என்பதைக் குறிக்கும்.]

2. தன்னிலை விளக்கம்.

திரு. நா. காசிராமனைப்பற்றி முதலமைச்சர் கூறியது.

திரு. நா. காசிராமன் : தலைவர் அவர்களே, கும்பகோணத்தில் 1966-ல் சங்கராசாரியருடைய படத்தைப் பற்றிய நிகழ்ச்சியைக் குறித்து நான் கேட்ட கேள்விக்கு முதல் அமைச்சர் தகவல் இல்லை என்று முதலில் சொன்னாலும், பிற்பாடு, என்னை ஆதரித்து வேலை செய்த கட்சி செய்தது பற்றிக் குறிப்பிட்டதால் தன்னிலை விளக்கம் கொடுக்க விரும்புகிறேன். இம்மாதிரியான நிகழ்ச்சி என்னுடைய வீட்டுக்குப் பக்கத்திலுள்ள வீட்டிலேயே, கட்சியின் செயலகத்தில் அப்படிப்பட்ட ஒரு பொம்மையை வைத்து அவமானகரமாக செய்தார்கள். நானும் என்னுடைய தகப்பனாரும் சேர்ந்து போலீஸ் இடம் சொல்லி அதை அகற்றுவதற்கான முயற்சிகளைச் செய்தோம். இதை போட்டோ பிடித்து, காங்கிரஸுக்கு எதிராக பலர் சென்னையிலும், மற்ற ஊர்களிலும் பிரசாரத்திற்குப் பயன் படுத்தினார்கள். இம்மாதிரியான நிகழ்ச்சிகள் இனியும் தமிழ்நாட்டில் ஏற்படாத வகையில், ஆத்திகத்திற்கும், நாத்திகத்திற்கும் இடம் கொடுக்கும் போது மற்றவர்கள் மனம் நோகாத வகையில் இருக்கும் வண்ணம் நடவடிக்கை எடுப்பார்கள் என்று நினைக்கிறேன். செய்யவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இவ்வளவு உறுதியாகச் சொல்லியவர்கள் அப்பொழுது, 1966-ல் பொதுத் தேர்தலுக்கு முன்பு, போலீசாரை தாங்கள் பார்த்தபோது, அவர்கள் வந்து பார்த்தபோது அப்படிப்பட்ட உருவம் அங்கே இல்லை என்று அன்றைக்கு அரசாங்கத்திற்கு அறிவித்திருக்கிறார்கள். அப்பொழுது இருந்த போலீஸ்காரர்கள்தான் சொல்லியிருக்கிறார்கள்.